மானால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே இதுபோன்ற கருவிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப்பிறகுதான் இதைக் கண்டுபிடித்து நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: இந்த வேகக்கட்டுப்பாடு அரசு பஸ்களுக்கு மட்டுமா? அல்லது தனியார் பஸ்களுக்கும் லாரிகளுக்கும் செயல்படுத்தப்படுமா? இந்த வேகக்கட்டுப்பாட்டை வேகமாகச் செயல்படுத்துவதற்கு அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு நான் ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டேன். பேருந்துகள் என்று சொன்னாலே தனியார் பேருந்துகளையும் சேர்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். கனரக ஊர்தி ஒன்று சொன்னேன். கனரக ஊர்தி என்றாலே சரக்கு ஊர்திகளையும் அதாவது லாரிகளையும் சேர்த்துத்தான். இதை விரைவாகக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் நீங்கள் வாங்குகிற கார்களுக்குக்கூட இதைப் பொருத்தவேண்டுமென்று சொல்லத் திட்டமிட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவில்—சென்னை பேருந்துப்பணி.

*வினா என் 97—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக நாகர்கோவிலுக்கும்—சென்னைக்கும் இடையே பஸ் ஒன்று விட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 20-10-1980 முதல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சென்னை—நாகர்கோவில் தடத்தில் கூடுதலாக இரண்டு பேருந்துகளை விடுகிறது.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இடையே ஏ. சி. பஸ் விடுவதற்கு செயற்குறிப்பு உள்ளதா என்ற கேள்வியை நான் கேட்டிருந்தேன். ஆனால் கேள்வியிலே ஏ. சி. பஸ் சேர்க்கப்படவில்லை, விடையிலாவது ஏ. சி. பஸ் கிடைக்குமா? வெகு தூரம் செல்லும் விரைவுப் பேருந்துகளிலே வயர்லெஸ் கருவிகள் பொருத்தும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: கேள்வியில் ஏ. சி. கிடைக்கவில்லை, விடையிலாவது ஏ. சி. கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது தவறு. (குறுக்கீடு) ஏசி என்பதற்கு என்ன சொல்வது என்று

எனக்குப் புரியவில்லை. மீண்டும் கேட்ட கேள்வியிலிருந்து அவருக்கு ஏ. சி. பஸ் தேவை என்பதை அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார். அதைப்பற்றி அரசு ஆராயும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வெகுதூர விரைவுப் பேருந்துகளிலே வயர்லஸ் கருவிகள் பொருத்தப்படுமா என்று கேட்டேன். அதற்கு பதில் அளிக்க வேண்டும். அதோடு ரீடிரீட்டிங் டயர்களை மாற்றி மாற்றிப் போடுவதால் அடிக்கடி டயர்கள் பஞ்சர் ஆகிவிடுகின்றன. அதனால் பேருந்துகள் இடையிலேயே நின்றுவிடுகின்றன. அதை மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: வயர்லஸ் கருவிகள் மாட்டுவது பற்றி கேட்டிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு ஏற்கெனவே முடிவு எடுத்துவிட்டது. ஆங்காங்கே பேருந்துகள் நின்றுவிட்டாலோ அல்லது விபத்துக்கள் ஏற்பட்டாலோ அல்லது உடனே தொடர்பு கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ வயர்லஸ் கருவிகள் மூலமாக தொடர்பு கொள்ளவேண்டுமென்ற முறையிலே விரைவுப் பேருந்துகளிலே அதை அமலாக்கவேண்டுமென்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது. புதுப்பிக்கப்பட்ட டயர்களைப் போடுவதால் அடிக்கடி பேருந்துகள் நின்றுவிடுகின்றன என்று சொன்னார்கள். முதலிலே போட்ட டயரை, தேய்ந்த டயரை 1, 2, 3 முறைகள் புதுப்பிக்கலாம். ஆனால் அரசாங்கப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஒரே முறை புதுப்பிக்கப்பட்ட டயரைத்தான் போடுகிறோம், இரண்டாவது முறை புதுப்பிக்கப்பட்டதைப் போடுவதில்லை. அதன் காரணமாக ஆங்காங்கே இப்போது வண்டிகள் நிற்பது குறைந்து இருக்கிறது. எல்லாவற்றையும் புதிதாகப் போடவேண்டுமென்றால் கட்டணம் அதிகமாகும் சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, புதிதாக பஸ்கள் விடுவது ஒருபுறம் இருக்க நீண்டதூர பஸ்களைப் பொறுத்தவரையில் பழைய பஸ்களை விடுவதால் சட்டமன்றக் கூட்டத்திற்கு வருகிறபோதுகூட இடைவழியிலே நின்றுவிடுவதால் நாங்கள் மறுநாள் தான் வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. பழைய பஸ்களை 100 கிலோ மீட்டர் வரையில் உள்ள தூரத்துக்கு விட்டுவிட்டு அதற்கு மேற்கொண்டு உள்ள நீண்ட தூரம் செல்கின்ற பஸ்களை புதிய புதிய பஸ்களாக விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனை நல்ல யோசனையாக இருந்தாலும், இப்பொழுதே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு பேருந்தை மூன்றாண்டுகளுக்கு மேல் நாங்கள் பயன்படுத்துவது இல்லை; ஆனால் மற்ற இடங்களில் 15 ஆண்டுகள்கூட பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டு இருந்தாலும், இதிலே மூன்று ஆண்டுகளுக்குத்

தான் பயன்படுத்துகிறோம். காரணம் என்னவென்றால், ஒரு ஆண்டிலே மட்டும் அதை எடுத்துவிட வேண்டுமென்றால், அதற்கான கூடு வித்தியாசமானது, அதை மீண்டும் உடைத்து வேறுவகையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும், நான் ஏற்கனவே சொன்னதைப் போல அதற்கான கட்டணத்தைத் தேவையான அளவிற்கு உயர்த்தலாம் என்பதை ஒத்துக்கொண்டால், ஒரு ஆண்டுக்கு ஒரு முறை என்ன, ஆறு மாதங்களுக்கு ஒருமுறைகூட நாங்கள் மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

நெசவாளர்களுக்கு மலிவு விலையில் நூல் வழங்கல்.

வினா எண் 98—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி—கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி, பட்டு நூல்களை மலிவு விலையில் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவுத்துறை அமைப்பின்கீழ் செயல்பட்டு வரும் நெசவாளர்களுக்கு பருத்தி மற்றும் பட்டு நூல்கள் நியாய விலையில் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறைக்கு வெளியே உள்ள நெசவாளர்களுக்கு நியாயவிலையில் பருத்திநூல் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களுக்கு நியாயவிலையில் பட்டுநூல் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது; ஆனால் குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் நெசவாளர் சங்கங்களுக்குக் கூட்டுறவு நூற்பாலைகள் கொடுத்துவிட்டு, தனிப்பட்ட வியாபாரிகளுக்கு மீதியைக் கொடுக்கிறார்கள். அதையும் தேக்கிவைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கே குறைந்த விலைக்கு நூலைக் கொடுப்பதற்கான திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.